**செய்தி வெளியீடு** நாள் : **22.06.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2024-2025ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.390 கோடி மதிப்பீட்டில் 46 அறிவிப்புகள்**

**மாண்புமிகு அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் தகவல்**

•••••••

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி 21.06.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2024-2025ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின்** பதிலுரை :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், 2024-2025 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண் 26 மீதான என்னுடைய பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுத்திரத்தில் கப்பல் செலுத்தும் மாலுமியின் சாகசத்தோடும், ஒரு பட்டாளத்தையே வழிநடத்தும் சேனைத் தலைவரின் சாமர்த்தியத்தோடும் அவையை வழிநடத்துகின்ற பெருமகனே! கனிவும் கண்டிப்பும் உங்கள் இரு கை! கனிவும் கண்டிப்பும் உங்கள் இரு கை! அதனால் தான் பெருமையடைகிறது சபாநாயகர் இருக்கை! தங்களுக்கு என் வணக்கங்கள்!.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலான எங்கள் அன்புத் தலைவருக்கு முதல் வணக்கம். தமிழகத்தின் தலைமகன், வெற்றித் திருமகன் மாண்புமிகு முதல்வர் இருக்கும் திசை நோக்கி என்னுடைய வணக்கங்கள். இன்னா நாற்பதை வென்ற இனியவை நாற்பது எங்கள் முதல்வர்! நெற்றி வியர்வையை எல்லாம் வெற்றி வியர்வையாக சிந்துகிறவர் எங்கள் முதல்வர்! நாற்பதை வென்றது அவர் வியூகம், நானூற்றைத் தடுத்தது அவரது மதியூகம். நாற்பதை வென்றது அவருடைய வியூகம் என்றால், நானூற்றை தடுத்தது அவருடைய மதியூகம். இந்தியாவைக் காக்க இந்தியா கூட்டணியை உருவாக்கி-மதவாதத்தை செயலிழக்கச் செய்த மிதவாதம் எங்கள் தலைவர்! நாட்டுக்கே நம்பிக்கை தந்தவர் அவர்தான்! தேர்தலில் எல்லோரையும் புறங்காண வைக்கிறீர்கள்! தேர்தலில் எல்லோரையும் புறங்காண வைப்பவர், ஒருசில கட்சிகளை தேர்தலையே புறக்கணிக்கச் செய்தவர்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரால்தான் இங்கே மதவெறி பாசிசம் தோற்கிறது! அவரால்தான் மதவெறி பாசிசம் தோற்கிறது. பெரியாரின் மண்வாசம் ஜெயிக்கிறது!.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களே, எங்கள் சின்னவரே! அவர் இருக்கும் திசை நோக்கி வணக்கம். அரசியல் மைதானத்தில் கால்பந்துகளை எல்லாம் Goal பந்துகளாக மாற்றத் தெரிந்தவர்! பவுன்சர் பந்துகளை எல்லாம் பவுண்டரிக்கு அப்பால் தேர்தல் களத்திலே விளாசிக் கொண்டிருப்பவர். இருவிழியில் எப்போதும் சூரிய நெருப்பு! இதயத்தில் எப்போதும் கலைஞரின் இருப்பு! இருவிழியில் எப்போதும் சூரிய நெருப்பு! இதயத்தில் எப்போதும் கலைஞரின் இருப்பு! இயக்கத்தில் எப்போதும் எங்களுடைய தலைவரின் சுறுசுறுப்பு! இயக்கத்தில் எப்போதும் எங்கள் தலைவரின் சுறுசுறுப்பு – அவர் கண்ணசைவுக்குக் காத்திருக்கும் இளைஞரின் துருப்பு – நீங்கள் தான், அவர் தான் இந்தக் கழகத்தின் வருங்கால கருப்பு சிவப்பு! தலைவர் எய்த ஏவுகணையை, தலைவர் எய்த ஏவுகணையை தமிழகம் முழுவதும் களமாடி வந்தவர்! நாற்பது தொகுதி வெற்றிகளையும் தலைவர் கைகளிலே ஏந்தித் தந்தவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சி என்னும் மாளிகையை அழகாக எழுப்ப துறைகள் என்னும் தூண்களே முக்கிய காரணம். ஒவ்வொரு துறையின் வெற்றியே ஒட்டுமொத்த அரசின் வெற்றியாகும். நம் நூற்றாண்டு நாயகர் - ஐந்து முறை அரசாண்ட முத்தமிழ் கலைஞர் அவர்களால் 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "மெட்ராஸ் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்" கடந்த 53 ஆண்டுகளாக சென்னை பெருநகர வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து வருகின்றது. அந்த தியாகத் தலைவரின் நினைவிடம் திறக்கப்பட்ட பிறகு, அந்த தியாகத் தலைவரின் நினைவிடம் திறக்கப்பட்ட பிறகு நடைபெறுகின்ற முதல் சட்டப் பேரவைக் கூட்டம் இது. இக்கூட்டத்தின் வாயிலாக பூக்கள் கோலமிடும் கலைஞரின் சலவைக்கல் சதுக்கத்தில் என்னுடைய நன்றிகளை காணிக்கை ஆக்கி என்னுடைய பதிலுரையை தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கடந்த காலங்களில் நடந்தவைகளை நிகழ் காலத்தில் பாடமாக்கிக் கொண்டால், எதிர் காலத்தில் எச்சரிக்கையாக இருக்க முடியும் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். காலத்திற்கேற்ற நடைமுறைகளை உருவாக்குவது மிக அவசியம் என்பதால் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் அனைத்துப் பணிகளும் இன்று கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இதனால் இணையவழிமூலம் எளிதாக விண்ணப்பிக்கின்ற வசதியை மக்களுக்கு வழங்கி, அன்றாட நடைமுறைகளில் விரைவான சேவைகளையும் வெளிப்படைத் தன்மைகளையும் உறுதிப்படுத்தி உள்ளோம். இணையவழித் திட்ட அனுமதி, அதுவே நம் வளர்ச்சிக்கு கிடைத்த

வெகுமதி! என்பதற்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முற்றிலுமாக இணையவழித் திட்ட அனுமதி வழங்கப்பட்டு வருவதால் விண்ணப்பங்களின் எண்ணிக்கை இன்றைக்கு அதிகரித்துள்ளன, திட்ட அனுமதிகளும் அதிகரித்துள்ளன. குறிப்பாக, உயரமான கட்டடங்களுக்கு அனுமதி வேண்டி 2020 ஆம் ஆண்டு 90 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில், 48 விண்ணப்பங்களுக்கு திட்ட அனுமதி கிடைத்தன. ஆனால், 2023 ஆம் ஆண்டு 135 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 105 விண்ணப்பங்களுக்கு திட்ட அனுமதி வழங்கியிருக்கின்றோம். மேலும், இந்த ஆண்டு மனைப்பிரிவுகளுக்கும் திட்ட அனுமதி வழங்குவதும் கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அதிக அளவில் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டு வருகிறது. கணினி மயமாக்கம் என்பது எங்கள் செயல்களில் புதுவேகத்தையும் செய்து முடிப்பதில் உத்வேகத்தையும் தந்துகொண்டிருக்கின்றார் எங்கள் மாண்புமிகு முதல்வர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! வடசென்னை வளர்ச்சித் திட்டம். சென்னையின் சரிபாதியாக இன்றைக்கு வடசென்னை பகுதி பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாக உள்ளது. தொழிற்சாலைகளும், தொழிற்சாலையை சார்ந்த தொழிலாளர்களும் உடல் உழைப்பாளர்களும் நிறைந்த பகுதி வடசென்னை பகுதியாகும்.

மழை என்றால் நனைந்து, வெயில் என்றால் காய்ந்து, குளிர் என்றால் நடுங்கி வாழ்க்கையை நகர்த்துகின்ற அடித்தட்டு மக்கள் நிறைந்த பகுதி எங்கள் வடசென்னை பகுதி. நாமெல்லாம் சாலைகளை பயணத்திற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால், வடசென்னை பகுதி வாசிகளோ சாலையையே தங்கள் வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தி வருகிறார்கள். ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த சொல்லுக்கு ஏற்ப நாளும் உழைப்பவர் நம் முதல்வர் என்பதை நிருபிக்கின்ற வகையில் வடசென்னை மக்களின் வாழ்வாதாரம் மேம்பட நம் மாண்புமிகு மனிதநேய முதல்வர் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றாரே வள்ளலார், அந்த வள்ளலார் நகரில் கடந்த 14-3-2024 அன்று வடசென்னையின் வளர்ச்சிக்காக 11 துறைகளை ஒருங்கிணைத்து 219 திட்டங்களை 4,181 கோடி ரூபாய் செலவில் வடசென்னையை வாடா சென்னையாக்க இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திட்டமிட்டிருக்கின்றார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அன்பான உத்தரவின்பேரில் ரூபாய் 4,181 கோடியில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் 1,524 கோடி ரூபாயை தன் பங்களிப்பாக அளித்திருக்கின்றது. வளர்ச்சி என்பது வசதியானவர்களுக்கு வாய்ப்பு தருவது அல்ல! வளர்ச்சி என்பது வசதியானவர்களுக்கு வாய்ப்பு தருவது அல்ல! வாய்ப்பு

கிடைக்காதவர்களுக்கும் வசதி செய்து தருவது! என்பதே எங்கள் திராவிட ஆட்சியின் சமூகப்புரட்சி! மாண்புமிகு முதல்வரின் கருணை உள்ளத்தால் இனி வடசென்னை, தென் சென்னை, மத்திய சென்னை போல் வளம் பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பேருந்து முனையங்கள். நகரம், மாநகரம், கிராமங்கள் என அனைத்துத் தரப்பு மக்களையும் அன்றாட வாழ்க்கையில் அவசியத் தேவையாகின்றது பேருந்துகள். அந்த பேருந்து வாகனங்கள் நகர்ந்தால்தான் மக்களின் வாழ்க்கையும் நகரும். அந்தவகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையின் நான்கு திசைகளிலும் புதிய பேருந்து முனையங்களை உருவாக்கி மக்களின் சிரமங்களை வெகுவாக குறைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார். சமீபத்திய சாதனையாக "இது பேருந்து நிலையமா அல்லது விமான நிலையமா" என்று வியந்து பார்க்கின்ற வகையில் கிளாம்பாக்கத்தில் அதிநவீன வசதிகளுடன் சுமார் ரூபாய் 400 கோடி செலவில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை 30-12-2023 ஆம் ஆண்டு மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தவர் எங்கள் பெருமைமிகு மாண்புமிகு முதல்வர் என்பதை பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியப்பைப் போலவே ஒரு சிலர் அண்ணார்ந்து பார்த்தார்கள். ஒரு சிலர் விமர்சனங்களை முன்வைத்தார்கள். நேரம் ஆகிறது என்றார்கள். காலம் ஆகிறது என்றார்கள். ஆனால் அத்தனை விமர்சனங்களையும் எதிர்கொண்டு சிறுசிறு குறைகள் யாவையையும் பூர்த்திசெய்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் எங்களோடு இணைத்துக்கொண்டு அனைவரும் மனதார பாராட்டுகிற வகையில் பேருந்து முனையத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தவர் எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை இங்கே பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் இப்பேருந்து முனையப் பணிகள் சரியாக திட்டமிடப்படாததால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கூடுதலாக ரூபாய் 210 கோடி ஒதுக்கீடு செய்து பேருந்து பயணம் இனியப் பயணமாக மாறுவதற்கு பல்வேறு திட்டங்களை வகுத்து தந்து அந்தப் பணிகளும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எங்கள் மாண்புமிகு முதல்வரைப் பொறுத்தவரையில், எங்கள் முதல்வர் முடியாது என்று முற்றுப்புள்ளி வைப்பவர் அல்ல! முடியாததையும் முடித்துக் காட்டி வெற்றிப்புள்ளி பெறுபவர்தான் எங்கள் முதல்வர்!, இந்த மூன்று ஆண்டு ஆட்சிகளே அதற்கு சான்று!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையங்கள் குத்தம்பாக்கத்தோடு நின்றுவிடாமல், அருகிலே இருக்கிற குத்தம்பாக்கத்தில் 25 ஏக்கர்

பரப்பளவில் ரூபாய் 427 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் மாதத்திலே அந்த பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவோம் என்ற உறுதியை இந்த பேரவையிலே அறிவிக்கின்றோம். அதோடு நின்றுவிடாமல், செங்கல்பட்டில் ரூபாய் 97 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம், மாமல்லபுரத்தில் சுமார் ரூபாய் 90 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து முனையம், முடிச்சூரில் ஆம்னி பேருந்துகளுக்காக ரூபாய் 42.70 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிறுத்துமிடம் ஆகிய பணிகள் மக்கள் வசதிக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முனையங்கள் பயணிகளுக்கு எளிதாகின்றன. இம்முனையங்கள் பயணிகளுக்கு எளிதாகின்றன. பயணங்களும் இனிதாகின்றன. இதனால், நிகழ்கால நெரிசல் மறையும், வருங்கால நெரிசல் குறையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் முதல்வரின் ஆட்சி காகிதத்தில் மட்டுமே சாதிக்கிற ஆட்சி அல்ல, எங்கள் முதல்வரின் ஆட்சி காரியத்திலும் சாதிக்கிற ஆட்சி என்பதற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமே இன்றைக்கு சாட்சி. தமிழகத்திலே குறிப்பாக சென்னையிலே வெள்ளம் ஏற்பட்டபோது ஆறுதலும் நிதியும் தர மறுத்தவர்கள் தேர்தல் ஆதாயம் தேடி தமிழ்நாட்டைச் சுற்றிசுற்றி வந்தபோதும் மக்களின் கோப வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. ஆனால், எங்கள் முதல்வரை மக்கள் அன்பு மழையிலே நனைய வைத்ததன் விளைவுதான் தமிழ்நாட்டில் நாற்பதுக்கும் நாற்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் சென்னையில் Road show நடத்துகிற தலைவர் அல்ல! எங்கள் தலைவர் சென்னையில் Road show நடத்துகிற தலைவர் அல்ல! மாநகர சென்னையின் மாபெரும் வளர்ச்சிக்கு வித்திடுகிற தலைவர்! மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி சென்னை மாநகரத்தின் 26 சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று கடந்த ஆண்டு 50 அறிவிப்புகளை வெளியிட்டிருந்தோம். இதுவரையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் கடந்த 3 ஆண்டு கால ஆட்சியில் அறிவிக்கப்பட்ட 69 திட்டங்களில் 14 திட்டங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மீதமிருக்கிற அறிவிப்புகளையும் விரைந்து முன்னேற்றம் அடையச் செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால், 2011 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையில் கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஒட்டுமொத்தமாக 67 அறிவிப்புகள். ஆனால், இந்தாண்டு தற்போது இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படுகின்ற அறிவிப்புகளையும் சேர்த்தால் 46 அறிவிப்புகளோடு இணைத்து 96 அறிவிப்புகளை இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு தமிழக

முதல்வர் அவர்கள் உத்தரவோடு அறிவித்திருக்கின்றோம். இந்த அனைத்து திட்டப் பணிகளையும் இன்னும் 2025 ஆம் ஆண்டு நிறைவுக்குள் முழுமையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு முதல்வரின் வழிகாட்டுதலோடு சென்னைப் பெருநகரத்தின் அசுர வளர்ச்சியிலும் அசராமல் பணியாற்றி வரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் இந்த ஆண்டு ரூபாய் 390 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 46 அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன். நேரமின்மை காரணமாக 11 அறிவிப்புகளை மட்டும் இங்கு வாசிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது 9 பேர் வெட்டுத் தீர்மானங்களை, ஒரே பொருள் குறித்து தந்திருக்கிறார்கள். அது என்னவென்றால், ஒரு விசித்திரமான வியப்பு. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 2013 ஆம் ஆண்டு கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு திட்டமிட்டார்கள். தற்போது அவர்களால் முடியாததை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நினைத்ததை முடிக்கின்ற ஆற்றல்பெற்ற நம்முடைய முதல்வர் அவர்கள், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை கட்டி முடித்துக் காட்டியிருக்கிறார். அந்த 9 பேர் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களில் 6 பேர் அ.இ.அ.தி.மு.க.-வைச் சார்ந்த உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தின் பொருள் கிளாம்பாக்கத்தில் செயல்படுகின்ற பேருந்து நிலையத்தை கோயம்பேட்டிலே செயல்படுத்த வேண்டும் என்று வெட்டுத் தீர்மானத்தைத் தந்திருக்கிறார்கள்.

கிளாம்பாக்கத்தில் செயல்படுகின்ற பேருந்து நிலையத்தில், தற்போது 2000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் தினந்தோறும் பயன்பாட்டில் இருக்கின்றன. அந்த பேருந்து நிலையத்தில் சாதாரண நாட்களில் சுமார் 50,000 பயணிகள் பயணிக்கிறார்கள். விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் சுமார் 75,000 பயணிகள் பயணிக்கின்றார்கள். சிறப்பு நாட்களில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் பேருந்துகளில் பயணிக்கிறார்கள். அந்தப் பயணிகள் அனைவருக்கும் தேவையான பேருந்து வசதி இருக்கின்றது என்பதை வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லி, வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அன்போடு கேட்டு அமர்கின்றேன்.